**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.55** **நாள் : 21 .04.2018**

## கொளத்தூர்–வில்லிவாக்கம் சந்திக்கடவு எண்–1ல் (ஐ.சி.எஃப் கேட்) ரூ.58.50 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற உள்ளது.

வில்லிவாக்கம் சந்திக்கடவு எண்–1க்கு மாற்றாக வடக்கில் கொளத்தூர் பிரதான சாலையையும், தெற்கில் ஐ.சி.எப் சாலையையும் இணைக்கும் வண்ணம் மேம்பாலம் அமைப்பதற்காக 2003ம் ஆண்டில் திட்டமிடப்பட்டது.

இத்திட்டத்திற்கான செலவினை பெருநகர சென்னை மாநகராட்சி, இரயில்வே துறையுடன் இணைந்து 50:50 விகிதாச்சாரத்தில் பகிர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது. 2005–2006ல் இப்பணி இரயில்வே துறையின் Pink Book-ல் சேர்க்கப்பட்டது. ஆய்வின்படி, இச்சந்திக்கடவு 15 நிமிடங்களுக்கு ஒருமுறை மூடப்படும். பல இரயில்கள் இச்சந்திக்கடவினை கடக்கும்போது 30 நிமிடங்கள் வரை மூடப்படும். மேலும், இச்சந்திக்கடவினை கடக்கும் இரயில் வாகனப் பெட்டிகள் (Train Vehicle Unit) 10 இலட்சங்களுக்கு அதிகமாகவும், வருடாந்திர தினசரி சராசரி போக்குவரத்து 19000 PCU ஆக உள்ளதாலும், இச்சந்திக்கடவுக்கு மாற்றாக மேம்பாலம் அமைக்கப்பட வேண்டிய அவசியமாகிறது.

இம்மேம்பாலமானது கொளத்தூர் பகுதியை அண்ணாநகர் பகுதியுடன் இணைக்கும் முக்கிய இணைப்புப் பாலமாகும். இம்மேம்பாலத்தினால் கொளத்தூர், ஜி.கே.எம் காலனி, பெரியார் நகர், கொரட்டூர், பாடி, ஐ.சி.எப். அண்ணாநகர் மற்றும் பெரம்பூர் பகுதி மக்கள் மிகவும் பயனடைவர்.

இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.58.50 கோடியாகும். (இதில் ஐ.சி.எப். நிறுவனத்திற்கு சொந்தமான நிலம் மற்றும் தனியார் நிலங்களை கையகப்படுத்துவதற்கான தொகையும் அடங்கும். மதிப்பீட்டிற்கு இரயில்வே துறையிடம் ஒப்பளிப்பு வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இரயில்வே துறையிடம் ஒப்பளிப்பு பெறப்பட்டபின்பு, வரைவு இறுதி திட்ட அறிக்கை தயார் செய்து, ஒப்பந்தம் கோரும் பணி நிறைவுற்றவுடன், விரைவில் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**